திரு. அ.மா. பரமசிவன் அவர்கள் 1977 முதல் 1980 வரை மேலூர் தொகுதியிலிருந்தும் மற்றும் 1991 முதல் 1996 வரை சோழவந்தான் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1993 முதல் 1996 வரை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உறுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

துணை மின் நிலையம்

***6858—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், தேவூர் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 மார்ச் 27]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், தேவூர் பகுதிக்கு, சங்கரி 110/22 கி.வோ., குமாரபாளையம் 110/22 கி.வோ. மற்றும் பூலாம்பட்டி 110/22 கி.வோ. துணை மின் நிலையங்களிலிருந்து தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பெருகிவரும் மின்பளுவைக் கருத்திற்கொண்டு, தேவூரில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் 16 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றியுடன் 12-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் அமைக்க திட்டமிடப்பட்டு, வாரிய ஆணை எண் 33, நாள் 4-7-2013 அன்று அனுமதியளிக்கப்பட்டது. ரூபாய் 9 கோடியே 18 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் இத்துணை மின் நிலையம் அமைப்பதற்கான அனைத்துப் பணிகளும் முடிவடையும் தருவாயில் உள்ளன. இத்துணை மின் நிலையம் இன்னும் ஒரு வார காலத்திற்குள் இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

முற்பகல் 10-05

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் தன்னிகரில்லா தலைவி மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வீற்றிருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். தேசம் காக்கும் தலைமை நீங்கள் அம்மா! ஏழை மக்கள் ஏற்றம் பெற எண்ணில்லா திட்டம் தந்தது எங்கள் அம்மா! கண் இமை மூடி திறக்கின்ற நேரத்தில் கோரிக்கையை நிறைவேற்றித் தந்த எங்கள் தாயே! இந்தத் துணை மின் நிலையத்திற்கு ஆணை வழங்கப்பட்டு, விரைவாக இயக்கப்பட இருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு கூறினார்கள். அதற்காக என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர்

அவர்களே, தேவூர் பகுதியில் ஏற்படும் மின் தடைகளை விரைந்து சரி செய்யவும், பொது மக்களுக்கான சேவைகள் துரிதமாகக் கிடைக்கவும் துணை மின் நிலையத்திலேயே பிரிவு அலுவலகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, தேவை ஏற்படின், அங்கே பிரிவு அலுவலகம் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான விவசாயப் பெருமக்கள் தங்களது பாசனக் கிணறுகளுக்கு சுய மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.10,000/- மற்றும் ரூ.25,000/- செலுத்தி, மின் இணைப்புக்காகக் காத்திருக்கின்றார்கள். அவ்வாறு காத்திருக்கும் விவசாயப் பெருமக்களுக்கு சுய மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் பாசனக் கிணறுகளுக்கு விரைவில் மின் இணைப்பு வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பதிவு மூப்பு* (seniority)

2015 மார்ச் 27]

அடிப்படையில், மின் இணைப்பு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மின் பளுவின் தேவையைக் கணக்கிட்டு, அதற்கு ஏற்ற வகையிலே விவசாயிகளுக்குப் படிப்படியாக மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. அந்தப் பணிகளை இன்னும் விரைவுபடுத்துவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதிக்கு உட்பட்ட விக்கிரமங்கலம் கிராமத்தில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளது. அதை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட விக்கிரமங்கலம் பகுதியில் உள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். அந்தப் பகுதியினுடைய மின் பளு மற்றும் தேவையைக் கணக்கிட்டு, தேவை ஏற்படின், அந்த 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கு ஆய்வுகளின் அடிப்படையில், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு மின் இணைப்பு வழங்குகின்றபோது, ஏற்கெனவே இலவச மின் திட்டத்திற்கான பதிவு மூப்பு அடிப்படையிலே ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. பிறகு சுயநிதி மின் திட்டத்தின் கீழே ரூ.25,000/-, ரூ.50,000/- மற்றும் ரூ.1,00,000/- செலுத்துபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே மின் இணைப்பு வழங்கப்படும் என்ற திட்டம் பதிவு மூப்பு அடிப்படையிலே வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த சுயநிதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, இலவச மின் இணைப்புகளை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், அது அப்படியே கிடப்பில் போட்ட மாதிரி இருக்கின்றது. எனவே, அவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது முற்றிலும் தவறான செய்தி. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதில்லை, அது கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது என்று எந்த அடிப்படையிலே சொல்கின்றார் என்றே தெரியவில்லை. தற்போது, இலவச மின்சாரம் கோரி விண்ணப்பிப்பவர்களுக்கும் ரூ.25,000/- மற்றும் ரூ.50,000/- பணம் கட்டி காத்திருப்பவர்களுக்கும், முன்னுரிமை அடிப்படையில், ஒவ்வொன்றிற்கும் பதிவு மூப்பு அடிப்படை கடைப்பிடிக்கப்பட்டு, மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது. இலவச மின்சாரத் திட்டத்திலும் seniority அடிப்படையிலே மின் இணைப்பு படிப்படியாக வழங்கப்பட்டுதான் வருகின்றது. அதேபோல, பணம் கட்டும் விவசாயிகளுக்கும் பதிவுமூப்பு முன்னுரிமை அடிப்படையில், மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது. எந்த ஒரு மின் இணைப்பையும் வழங்காமல், முற்றிலுமாக நிறுத்திவிடுவது இல்லை. அந்தப் பகுதியினுடைய மின் பளுவைக் கருத்தில்கொண்டு, படிப்படியாக இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத்தான் நான் ஏற்கெனவே

2015 மார்ச் 27]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, எந்த ஏரியாவிலும் மின் இணைப்பை நிறுத்துவதில்லை; நிறுத்தப்பட்டது என்பது தவறான தகவல். அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்னிணைப்பு வழங்குகின்ற பணியை, இலவச மின்சாரம் வழங்குகின்ற அந்தப் பணியை இன்னும் கொஞ்சம் துரிதப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

இரயில்வே மேம்பாலம்

***34354—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர்-குறிஞ்சிப்பாடிக்கு இடையே கன்னாரப்பேட்டையில் நடைபெறும் இரயில்வே மேம்பாலப் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

குறிஞ்சிப்பாடி தொகுதி, கடலூர்-விருத்தாசலம், சேலம் சாலை கிலோ மீட்டர் 0/6-ல் இரயில்வே கடவுக்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சேவைச் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.